**சுருக்கம்**

நெடுஞ்சாலைகள் – நில எடுப்பு – சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் – காஞ்சிபுரம் மாவட்டம் – திருவான்மியூர் முதல் அக்கரை வரை கிழக்கு கடற்கரைச் சாலை – விரிவுபடுத்தல் – தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001–ன் கீழ் மேல்நடவடிக்கை தொடர அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.டபிள்யு2) துறை**

அரசாணை (நிலை) எண்.185 நாள் 13–11–2013.

திருவள்ளுவர் ஆண்டு 2044, ஐப்பசி – 27 ம் நாள்.

படிக்க :–

1) அரசாணை (நிலை) எண்.229, நெடுஞ்சாலைத் (எச்டபிள்யு1) துறை, நாள் 14.11.2005.
2) அரசாணை (நிலை) எண்.104, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு.1) துறை, நாள் 12.06.2012.
3) தனித்துணை ஆட்சியர் (நி.எ), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III, ந.க.130/2007/அ1, நாள் 17–10–2012, 13–08–2013, மற்றும் 06–09–2013.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் 2005–06ம் ஆண்டிற்கான போக்குவரவு மற்றும் போக்குவரத்து திட்டத்தின் கீழ் (Traffic and Transportation) ரூ.525.05 கோடி செலவினத்தில் 87 சாலை மற்றும் 10 பாலப்பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது. அப்பணிகளில் கிழக்குக் கடற்கரைச் சாலையை திருவான்மியூரிலிருந்து அக்கரை வரை (கி.மீ.11/8–23/2) ஆறுவழித்தடச்சாலை அமைக்கும் பணியும் ஒன்றாகும்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேலே குறிப்பிட்ட பணிக்கு ரூ.354.66 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III–ன் தனித்துணை ஆட்சியர் (நிலஎடுப்பு), பூந்தமல்லி அவர்கள், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக அனுமதி வழங்கியதன் அடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்க நல்லூர் வட்டம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய கிராமங்களில் திருவான்மியூர் முதல் அக்கரை வரை கிழக்குக் கடற்கரைச் சாலையை விரிவுபடுத்தும் பணிக்கு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001–ன்படி நில எடுப்பு செய்திட சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கோட்டம்–I, கிண்டி–32 அவர்கள் அனுப்பிய நில திட்ட அட்டவணையின் அடிப்படையில் பாலவாக்கம், நீலாங்கரை, கொட்டிவாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் கிராமங்களுக்கு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001–ன் கீழ், பிரிவு 15(2)–ன் கீழான அறிவிக்கைகள் பிரசுரம் செய்யப்பட்டு முறையே 01–07–2010, 02–07–2010, 24–08–2010, 25–08–2010, 09–08–2010, 10–08–2010, 06–10–2010, மற்றும் 27–10–2010 ஆகிய நாட்களில் பிரிவு 15(2)–ன் கீழான விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும், மேற்குறிப்பிட்ட நாட்களில்

விசாரணைக்கு ஆஜரான நபர்கள் தங்கள் நிலங்களை கையகப்படுத்திட ஏற்கனவே கிழக்கு கடற்கரைச் சாலைத் திட்ட தனிவட்டாட்சியர் (நி.எ), அவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்ததைத் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டதில், மேற்கண்ட கிராமங்களில் 1992–ம் ஆண்டுவாக்கில் கிழக்குக் கடற்கரைச் சாலையை அகலப்படுத்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்ட தனி வட்டாட்சியர் (நி.எ), நியமனம் செய்யப்பட்டு 1894–ம் வருடத்திய நில எடுப்பு சட்டத்தின் கீழ் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பிரிவு 4(1) கீழான அறிவிக்கையும், அதன் தொடர்ச்சியாக உள்ள நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது. இருப்பினும் திருவான்மியூர் முதல் கடலூர் முடிய அபிவிருத்தி செய்யப்படும் கிழக்கு கடற்கரைச்சாலைத் திட்டத்தில் 13/3 கி.மீ. முதல் 22/6 கி.மீ. முடிய உள்ள சாலைகளை நிலஎடுப்பு செய்து அகலப்படுத்தும் தேவை ஏற்படாததால் புலத்தில் உள்ள பழைய சாலையை பலப்படுத்தும் பணி மட்டுமே மேற்கொள்ள இருப்பதால் நிலஎடுப்பு தேவைப்படவில்லை என்று தெரிவித்து, நிலஎடுப்பு பிரேரணைகள் விடுவித்துக்கொள்ளப்பட்டது என்றும் அதன்படி நில எடுப்பில் கவரப்படும் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, சோழிங்கநல்லூர், ஈஞ்சம்பாக்கம் பிளாக் 1 மற்றும் ஈஞ்சம்பாக்கம் பிளாக் 2 கிராமங்களுக்கு முறையே 10–11–1995, 22–09–1995, 08–09–1996, 22–09–1995, 26–07–1996 மற்றும் 22–09–1995 ஆகிய தேதிகளில் தீர்ப்பாணை பகரப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் மேற்குறிப்பிட்ட கிராமங்களுள் நீலாங்கரை மற்றும் ஈஞ்சம்பாக்கம் பிளாக் 1–ஐ தவிர ஏனைய கிராமங்களின் நிலஎடுப்பு மாற்றுப் பிரேரணைகள் உரிய நேரத்தில் கேட்புத்துறையிடமிருந்து (நிலஎடுப்பு தொடர்வது தொடர்பான புதிய பிரேரணைகள்) கிடைக்கப் பெறாததால் அவைகள் தானாகவே காலக்கெடு முடிவுற்றமையால் தகுதியிழந்து விட்டன என்றும், எஞ்சிய இரண்டு கிராமங்களுக்கும் (நீலாங்கரை மற்றும் ஈஞ்சம்பாக்கம் பிளாக் 1) நிலஎடுப்புச் சட்டப் பிரிவு 48(1)–ன் கீழான நிலஎடுப்பு நடவடிக்கையிலிருந்து விலக்கிக் கொள்வதற்கான பிரேரணையை அரசுக்கு பரிந்துரை செய்து, நிலஎடுப்பு பிரேரணையிலிருந்து மேற்குறிப்பிட்ட இரண்டு கிராமங்களை விலக்கிக் கொள்ள ஆவன செய்ய வேணுமாய் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்ட தனிவட்டாட்சியர் (நி.எ) தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

4. மேலும், கிழக்கு கடற்கரைச் சாலைத் திட்ட தனிவட்டாட்சியர் (நி.எ), அவர்களால் நிலஎடுப்புச் சட்டம் 1894ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் உரிய காலக்கெடுவிற்குள் தீர்ப்பாணைகள் பகரப்படாத நிலையில் காலாவதியாகிவிட்டதாகத் தெரியவருவதாலும், அரசால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் திருவான்மியூர் முதல் அக்கரை வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலையினை அகலப்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15(1)–ன் கீழான அறிவிக்கையினை விரைவில் வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளதன் அடிப்படையிலும் தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15(2)–ன் கீழான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் மேல் நடவடிக்கைகள் தொடர்வதற்கு உரிய உத்திரவினை வழங்கும்படி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III-ன் தனித்துணை ஆட்சியர் (நி.எ) அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

5. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III-ன் தனித்துணை ஆட்சியர் (நி.எ), பூந்தமல்லி அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து, கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்ட தனிவட்டாட்சியர் (நி.எ) அவர்களால் நிலஎடுப்புச் சட்டம் 1894–ன் கீழ் திருவான்மியூர் முதல் அக்கரை வரையில் சாலை அகலப்படுத்துவதற்காக நிலஎடுப்பு செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் உரிய காலக்கெடுவுக்குள் தீர்ப்பாணைகள் பகரப்படாத நிலையில் காலாவதியாகிவிட்டதாக கருதி, தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001–ன் கீழ் நிலஎடுப்பு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III–ன் தனித்துணை ஆட்சியர் (நி.எ), பூந்தமல்லி அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை வருவாய்த் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.35560/நிநி2/ 2013—1, நாள் 05—10—2013—ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தனித்துணை ஆட்சியர் (நில எடுப்பு), தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்—III, பூவிருந்தவல்லி, சென்னை—56.
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத்துறை,சென்னை—16.
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம்.
மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை / காஞ்சிபுரம்.
மாநில கணக்காயர், சென்னை—18/35.
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை—35.

<u>நகல்:—</u>

மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் அவர்களின் தனிச்செயலாளர், சென்னை—9.
தேசிய தகவல் ஆணையம், சென்னை—9.
அனைத்து திட்டப் பிரிவுகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்